

காஞ்சிபுரத்தில் மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். உடன் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மாவட்டச் பொருளாளர் சன் பிராண்ட் கே.ஆறுமுகம், மேயர் மகாலட்சுமி யுவராஜ் உள்ளிட்ட மாநில, மாவட்ட. மாநகர . ஒன்றியக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டனர்.



திருச்சியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே. என். நேரு தலைமையில் தி.மு.க.வினர், மொழிப்போர் தியாகிகளின் வீர வணக்க நாள் மௌன அஞ்சலி ஊர்வலத்தில் பங்கேற்று பின்னர் தியாகிகளின் நினைவிடத்திற்கு மலரஞ்சலி செலுத்தினர். ஊர்வலத்தில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி. மாநகர செயலாளர் அன்பழகன். வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ. மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தரபாண்டியன், ஸ்டாலின் குமார், கதிரவன், பழனியாண்டி, முன்னாள் எம்எல்ஏ அன்பில் பெரியசாமி, தலைமை கழக பேச்சாளர் குடியாத்தம் கோட்டீஸ்வரன் உட்பட மாவட்ட மாநகர நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.





